O.S. 114/2022 நாள்: 22-09-2025

PW2 இராஜேந்திரன் த/பெ.ஆறுமுகம்

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. இவ்வழக்கு எந்த வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2018 ஆம் வருடம் ஆகும். இவ்வழக்கிற்கும் எனக்கும் என்ன தொடர்பு என்றால் அ.சா. 1 எனது ஊரை சேர்ந்தவர். இந்த வழக்கு சம்பந்தமாக என்ன எனக்கு தெரியும் என்றால் கடந்த 50 வருடங்களாக வாதி அங்கு வசித்து வருகிறார். தாவா சொத்து இரத்தினாம்பாள் பெயரில் இருந்து அனுபவித்து வந்து அவர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது பேரன் ஆ அ.சா.1 னின் அனுபவத்தில் இருந்து வருகிறது.

2. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் முதல் தவணை தொகை ரூபாய் .26,029/- வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. முதல் தவணையாக ரூ.26,029/- தான் வழங்கப்படும். மேற்கொண்டும் 2 தவணைகளாக ரூ.26,681/- மற்றும் ரூ. 26,715/- 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட்டுவிட்டு என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டில் 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து பின்னர்தான் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் 1ம் பிரதிவாதிக்கு அனைத்து தவணை தொகைகளையும் வழங்கி அதன் மூலம் வீடு கட்டி 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்பதால் இவ்வழக்கு நிலைக்கத் தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/ர.மீனாட்சி., எம்., எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,- கீழ்வேளூர்.

O.S.114/2022 நாள்: 22-09-2025

PW1 தியாகராஜன். த/பெ.இராஜகோபால்

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. இவ்வழக்கினை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 2018 நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கினை 2ம் பிரதிவாதி முதலாம் பிரதிவாதிக்கு வீட்டினை ஒதுக்கிய பின்னர்தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் முன்னரே எனது எதிர்பினை 2ம் பிரதிவாதியிடம் தெரிவித்தேன்.

2.நான் இவ்வழக்கினை 31.10.2018 தேதியில் தான் தாக்கல் செய்தேன் என்றாலும் அதற்கு முன்னரே 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் முதல் தவணை தொகை ரூபாய் .26,029/- வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மேற்கொண்டும் 2 தவணைகளாக ரூ.26,681/- மற்றும் ரு. 26,715/- 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட்டுவிட்டு என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டில் 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து பின்னர்தான் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தி்ல் 1ம் பிரதிவாதிக்கு அனைத்து தவணை தொகைகளையும் வழங்கி அதன் மூலம் வீடு கட்டி 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்பதால் இவ்வழக்கு நிலைக்கத் தக்கது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/ர.மீனாட்சி., எம்., எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,- கீழ்வேளூர்.